# பொன்னேரி நகராட்சி

## திருவள்ளூர் மாவட்டம்

# நிர்வாக அறிக்கை

# 2021–22

# பொன்னேரி நகராட்சி

# நிர்வாக அறிக்கை
# 2021 - 2022

## அமைப்பும் நிர்வாகமும்

### ஆட்சி எல்லை:

அரண்ய நதியில் (ஆரணி ஆறு) சிராற்கள் விளையாட்டின் போது ஆற்றுமணலில் ஏர்கலப்பை (பொன்னாலான ஏறு) கிடைத்ததால் பொன் ஏரு என பெயர் பெற்று , தற்போது மருவி பொன்னேரி என அழைக்கப்படுகிறது. இவ்வூர் சிறப்பு மிக்க கோயில்கள் பலவற்றை கொண்டுள்ளது . பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1953/82 , நாள் 24.02.1982–ன் உத்திரவுப்படி இப்பேரூராட்சி தேர்வு நிலைப் பேரூராட்சியாக 24.02.1982 முதல் இயங்கிவருகிறது . அரசாணை எண் 116 நாள் 07.12.2021 ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. நிர்வாக வசதிக்காக பேரூராட்சி 18 வார்டுகளின் எல்லைகள் தமிழ்நாடு வார்டு எல்லை மறுவரையறை ஆணைய வழிகாட்டுதலின்படி நகராட்சியை 27 வார்டுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. இதன் விஸ்தீரணம் 8.04 சதுர கிலோ மீட்டராக உள்ளது.

### மக்கள் தொகை:

இந்நகராட்சி மக்கள் தொகை 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 31025. இதில் 15481 பேர் ஆண்கள், 15544 பேர் பெண்கள் ஆவர். தற்போதைய தோராய மக்கள் தொகை 36398.

### நகராட்சி அலுவலர்கள்:

### ஆணையர்:

01.04.2021 முதல் 16.12.2021 வரை திரு. வெற்றிஅரசு செயல் அலுவலராக பொன்னேரி பேரூராட்சியை நிர்வகித்துள்ளார். நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண் 116 நாள் 07.12.2021 ன்படி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து பொன்னேரி நகராட்சியின் முதல் ஆணையராக திருமதி K.M. தனலட்சுமி பி.காம்., அவர்கள் 17.12.2021 அன்று பொறுப்பேற்று பணிபுரிந்து வந்தார் . தற்போது திருவள்ளூர் நகராட்சி ஆணையர் திருமதி. G.ராஜலட்சுமி B.E., அவர்கள் 14.10.2022 முதல் ஆணையர் கூடுதல் பொறுப்பாக பணிபுரிந்து வருகிறார்.

### பொறியாளர்:

அறிக்கையாண்டில் 21.01.2022 முதல் திரு.ஏ.பி.குமார் என்பவர் பொன்னேரி நகராட்சி பொறியாளராக கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார்.

**தேர்தல்:**

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் தேர்தல் அறிவிக்கை நாள். 26.01.2022 ன்படி பொன்னேரி நகராட்சியில் வார்டு உறுப்பினர்களுக்கான நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 19.02.2022 அன்று நடைபெற்றதை தொடர்ந்து 22.02.2022 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு 1 முதல் 27 வார்டுகளுக்கான வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதனை தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பிர்களின் பதவியேற்பு நிகழ்ச்சி 02.03.2022 அன்று நடைபெற்றது. மேலும் 04.03.022 அன்று நகர்மன்ற தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகத்தேர்தல் நடத்தப்பட்டு 15வது வார்டு உறுப்பினரான திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் என்பவர் நகர்மன்ற தலைவராகவும், 3வது வார்டு உறுப்பினரான திரு. எஸ்.ஏ.விஜயகுமார் என்பவர் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார் .

நகர்மன்றத்தின் பதவிக் காலம் 24.10.2016ல் முடிவடைந்ததினை தொடர்ந்து அரசாணை எண்.146, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள் 24.10.2016ன்படி பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை தனி அலுவலராக நியமித்து உத்திரவிடப்பட்டதைத் தொடர்ந்து 01.04.2021 முதல் 16.12.2021 வரை திரு. ச.கண்ணன் அவர்கள் தனி அலுவலராக பணிபுரிந்துள்ளார். 17.12.2021 பிற்பகல் முதல் 25.01.2022 வரை திருமதி.கே.எம். தனலட்சுமி பி.காம்,. அவர்கள் தனி அலுவலர் மற்றும் ஆணையராகவும் செயல்பட்டுள்ளார். 2021–2022 அறிக்கையாண்டில் 9 சாதாரணக் கூட்டங்களும், 1 சிறப்புக்கூட்டங்களும் நடைபெற்றன.

மேலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செய்தி வெளியீடு எண். 7/2021 நாள். 26.01.2022ன்படி நகரமன்ற தலைவர்களை தேர்ந்தெடுக்க 19.02.2022 அன்று நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடத்தப்பட்டது. மேலும், 22.02.2022 அன்று வாக்கு எண்ணிக்கை நடத்தப்படடு, கீழ்க்கண்ட விபரப்படி நகரமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

| வ.எண். | வார்டு | உறுப்பினர் பெயர் | கட்சி |
|---|---|---|---|
| 1 | வார்டு 1 | திருமதி வசந்தா செ | திமுக |
| 2 | வார்டு 2 | திரு செந்தில்குமார் எ ப | அ.திமுக |
| 3 | வார்டு 4 | திருமதி பரிதா ஜெ | திமுக |
| 4 | வார்டு 5 | திருமதி பத்மா க | சுயேட்சை |
| 5 | வார்டு 6 | திருமதி சாமுண்டிஸ்வரி | திமுக |
| 6 | வார்டு 7 | திருமதி சரஸ்வதி த | திமுக |
| 7 | வார்டு 8 | திருமதி மோகனா கெ | திமுக |
| 8 | வார்டு 9 | திருமதி அருணா சே | அ.திமுக |
| 9 | வார்டு 10 | திருமதி வேலா க | திமுக |
| 10 | வார்டு 11 | திரு யாக்கோபு து | திமுக |